## மார்ச் - 26 - திங்கள்

பரிசுத்த வாரம்

**“ஏழைகள் உங்களோடு என்றும் இருக்கின்றார்கள். ஆனால் நான் உங்களோடு என்றும் இருக்கப் போவதில்லை” யோவா.12:8**

### முதல் வாசகம் : ஏசாயா 42 : 1 – 7

ஆண்டவர் கூறுவது இதுவே: இதோ! என் ஊழியர்! அவருக்கு நான் ஆதரவு அளிக்கிறேன் நான் தேர்ந்துகொண்டவர் அவர் அவரால் என் நெஞ்சம் பூரிப்படைகின்றது அவருள் என் ஆவி தங்கும்படி செய்தேன் அவர் மக்களினங்களுக்கு நீதி வழங்குவார். அவர் கூக்குரலிடமாட்டார் தம்குரலை உயர்த்தமாட்டார் தம் குரலொலியைத் தெருவில் எழுப்பவுமாட்டார். நெரிந்த நாணலை முறியார் மங்கி எரியும் திரியை அணையார் உண்மையாகவே நீதியை நிலை நாட்டுவார். உலகில் நீதியை நிலைநாட்டும்வரை அவர் சோர்வடையார் மனம் தளரமாட்டார் அவரது நீதிநெறிக்காகத் தீவு நாட்டினர் காத்திருப்பர். விண்ணுலகைப் படைத்து விரித்து, மண்ணுலகைப் பரப்பி உயிரினங்களைத் தோன்றச் செய்து, அதன் மக்களுக்கு உயிர்மூச்சுத் தந்து, அதில் நடமாடுவோர்க்கு ஆவியை அளித்தவருமான இறைவனாகிய ஆண்டவர் கூறுவது இதுவே. ஆண்டவராகிய நான் நீதியை நிலைநாட்டுமாறு உம்மை அழைத்தேன் உம் கையைப் பற்றிப்பிடித்து, உம்மைப் பாதுகாப்பேன் மக்களுக்கு உடன்படிக்கையாகவும் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் நீர் இருக்குமாறு செய்வேன். பார்வை இழந்தோரின் கண்களைத் திறக்கவும், கைதிகளின் தளைகளை அறுக்கவும், இருளில் இருப்போரைச் சிறையினின்று மீட்கவும் உம்மை அழைத்தேன்

**பதில்பாடல் :** ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு

### நற்செய்தி : யோவான் 12 : 1 – 11

பாஸ்கா விழாவுக்கு ஆறு நாளுக்கு முன்பு இயேசு பெத்தானியாவுக்குச் சென்றார். அங்குதான் இயேசு இலாசரை உயிர்த்தெழச் செய்தார். அங்கு அவருக்கு விருந்து அளிக்கப்பட்டது. மார்த்தா உணவு பரிமாறினார். இயேசுவோடு பந்தியில் அமர்ந்திருந்தவர்களுடன் இலாசரும் இருந்தார். மரியா இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத்தைலம் ஏறக்குறைய முந்நூற்று இருபது கிராம் கொண்டுவந்து இயேசுவின் காலடிகளில் பூசி, அதனைத் தமது கூந்தலால் துடைத்தார். தைலத்தின் நறுமணம் வீடெங்கும் கமழ்ந்தது. இயேசுவின் சீடருள் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்க இருந்தவனுமான யூதாசு இஸ்காரியோத்து, ”இந்தத் தைலத்தை முந்நூறு தெனாரியத்துக்கு விற்று, அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடாதா?” என்று கேட்டான். ஏழைகள்பால் கொண்டிருந்த அக்கறையினால் அல்ல மாறாக அவன் ஒரு திருடனாய் இருந்ததால்தான் இப்படிக் கேட்டான். பணப்பை அவனிடம் இருந்தது. அதில் போடப்பட்ட பணத்திலிருந்து அவன் எடுத்துக் கொள்வதுண்டு. அப்போது இயேசு, ”மரியாவைத் தடுக்காதீர்கள். என் அடக்க நாளை முன்னிட்டு அவர் இதைச் செய்யட்டும். ஏழைகள் உங்களோடு என்றும் இருக்கிறார்கள். ஆனால் நான் உங்களோடு என்றும் இருக்கப்போவதில்லை” என்றார். இயேசு அங்கு இருப்பதை அறிந்த யூதர்கள் பெருந்திரளாய் வந்தார்கள். அவர்கள் இயேசுவை முன்னிட்டு மட்டும் அல்ல, அவர் உயிர்த்தெழச் செய்திருந்த இலாசரைக் காண்பதற்காகவும் வந்தார்கள். ஆதலால் தலைமைக் குருக்கள் இலாசரையும் கொன்றுவிடத் திட்டமிட்டார்கள். ஏனெனில் இலாசரின் காரணமாக யூதர்களிடமிருந்து பலர் விலகி இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர்.

**தியானம்:** கடவுளை நாம் ஏன் அன்பு செய்கின்றோம்? ஏன் அவரை வழிபடுகின்றோம்? ஏன் ஆலயங்களுக்கு செல்கின்றோம்? அவர் நம்மைப் படைத்து, காத்து, பராமரித்து வருவதால் அவரை நாம் நன்றியோடு நினைத்து அவரை ஆராதிக்க வருகின்றோமா? அல்லது இந்த துன்பம் நிறைந்த வாழ்வை எப்படியாவது வாழ வேண்டும் என்பதற்காக கடவுளை தேவைக்குப் பயன்படுத்திக் கொள்ள அவரை உதவிக்கு அழைக்க வருகின்றோமா? சிந்திப்போம். நம்முடைய பெரும்பாலான ஜெபங்களும், மன்றாட்டுக்களும் நம்முடைய தேவைகளைக் குறித்தே இருக்கின்றதே தவிர கடவுளை உண்மையாக போற்றி துதித்து அவருடைய பிரசன்னத்தை உணர்ந்து மகிழக்கூடியவர்கள் நம்மில் மிகவும் சொர்ப்பமானவர்களே. பத்துத் தொழு நோயாளர்களுடைய நோயினை நீக்கிய இயேசுவுக்கு நன்றி சொல்லவந்த சமாரியனைப் பார்த்துக் கேட்கின்றார், “பத்துப்பேர்களின் நோயும் நீங்கவில்லையா? மற்ற ஒன்பதுபேர் எங்கே? கடவுளைப்போற்றிப் புகழ அன்னியராகிய உம்மைத் தவிர வேறு எவரும் திரும்பிவரக் காணாமே என்று (லூக்.17:17-18). மேலும் பாவியான பெண் இயேசுவின் காலடிகளை கண்ணீரால் கழுவி எண்ணெய் பூசியதைப் பார்த்துச் சொன்னார், இவள் செய்த பாவங்கள் மன்னிக்கப்பட்டன. ஏனெனில் இவர் மிகுதியாக அன்பு கூர்ந்தார் (லூக்.7:47) என்று. ஆண்டவர் தம்மீது அன்பு கூர்கின்ற மக்களை ஆவலோடு உற்றுநோக்குகின்றார். அவருக்காக தாகம் கொண்டு வாழும் மக்களையும் அவர்களது வாழ்வையும் கட்டியெழுப்புகின்றார். கடவுள் நம்மிடம் உண்மையாக விரும்புவது பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகின்றார். எரிபலிகளை விட கடவுளை அறியும் அறிவையே விரும்புகின்றார். (ஓசே.6:6). கடவுள் மீது கொண்ட அன்பு திரளான பாவங்களை போக்குகின்றது (1பேது.4:8). இறைவனை நமது வாழ்வில் போற்றி துதித்து ஆராதித்து அவரை மகிமைப்படுத்துகின்றபோது நம்முடைய திரளான பாவங்கள் மன்னிக்கப்படும். மாறாக கடவுளை அறிந்திருந்தும் கடவுளுக்குரிய மாட்சியை அவருக்கு அளிக்காமல் நன்றி செலுத்தாமல் நாம் வாழுகின்றபோது நம்முடைய எண்ணங்கள் பயனற்றதாகிப் போய்விடுகின்றன. நாமும் பயனற்றவர்களாகிப் போய்விடுவோம். (உரோ.1:21) நாம் கடவுள்மீது கொண்டிருக்கின்ற அன்பே நம்மை பரலோகம் சேர்க்கும்.